**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 - 2019**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) நீடிப்பதனூடாக வர்த்தக நகர் (கொழும்பு) மற்றும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கடற்துறைமுகம் (அம்பாந்தோட்டை) மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) என்பனவற்றிற்கிடையே தொடர்பினை பேனுதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் பகுதி 4 இன் கீழான அந்தரவேவ ஊடான மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 25 கி.மீ இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 55,965 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 55,615 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 435 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 350 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்மான வேலைகள் 2016 சனவரி 19 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 19 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2019 ஜுலை 09 வரை மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலின நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வேலை ஆரம்பிப்பு முற்பணம் 2019 ஜுன் 19ஆம் திகதிய இணக்கப்பாட்டு தீர்ப்பனவு சபையின் நிர்மானத்திற்கிணங்க மீளப்பெறப்பட்டிருந்து. அதன் பெறுபெறாக, ரூபா 132 மில்லியனான ஓர் நட்டம் ஏற்பட்டதுடன் அது நடைமுறை வேலைக்கு மாற்றப்பட்டு நிதிநிலைமை கூற்றில் நடைமுறைசொத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயம் ஏற்படக்கூடிய சாத்தியம். | இப் பெறுமதி நெடுஞ்சாலைகள் அமைச்சிலிருந்தான அனுமதியுடன் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் நடைமுறை வேலைக்கு மாற்றப்பட்டிருந்தது. | எதிர்கால செயற்திட்டங்களிள் இது ஏற்படும் போது சரியான வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தினை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இற்கு முரணாக, 2019 திசெம்பர் இலுள்ளவாறான ரூபா 16 மில்லியன் தொகையான இழப்பீடுகள் கொடுத்து தீர்ப்பதன் தாமதத்தின் மீதான வட்டிக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறை மதிப்பீடு. | உடன்பட்டனர். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.7 மற்றும் 14.8 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் ரூபா 330 மில்லியன் மற்றும் ரூபா 98 மில்லியன் தொகை முறையே தாமத வட்டி மற்றும் தாமதிக்கப்பட்ட வட்டி மீதான வட்டிக்கான மீளப்பெறுவனவாக வேண்டியிருந்தார். இருப்பினும் நிகழத்தக்க பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படவோ அல்லது வெளிப்படுத்தப்பட்டிருக்கவோ இல்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறை மதிப்பீடு. | உடன்பட்டனர். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட பணிப்பாளர் ரூபா 106 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்திற்காக நிர்மானிக்கப்பட்ட கட்டிடங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயலளவு அபிவிருத்தி நிலையமாக பயன்படுத்த 2019 ஒக்டோபர் 19 இல் நேரான எண்ணத்துடன் முன்மொழிந்தார். இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபை 2021 சனவரி 08 வரை இம் மும்மொழிவினை அங்கீகரித்திருக்கவில்லை. | கட்டிடங்களை தவராக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | அலுவலக வளாகங்களின் ஒரு பகுதி களஞ்சியமாக பயன்படுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஓர் கட்டிடத்துடனான ஆய்வுகூட உபகரணங்கள் மாகாணத்தின் தரக்கட்டுப்பாட்டு வேலைக்காக மாகாண பணிப்பாளரிற்கு (தெற்கு) கையளிக்கப்பட்டுள்ளது. மிகுதி ஆர்டிஏவிற்கான இயலளவு அபிவிருத்தி நிலையத்தினை நிறுவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அனுமதி செயற்பாடு செயன்முறையிலுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக நிரந்தர கட்டிடங்களை நிர்மானிக்கும் போது, செயற்திட்ட முடிவில் அக்கட்டிடங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கென ஓர் ஆரம்ப திட்டம் காணப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 20.6 இன் பிரகாரம் வேலைகளை பூர்த்திசெய்வதற்கு முன்னர் அல்லது பின்னர் நடுவர்தீர்ப்பு ஆரம்பிக்கப்படலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது, எனவே, 509 மில்லியன் தொகையான 3 பிணக்குகளின் பெறுவனவுகள் திருப்தியின்மையின் அறிவிப்புக்களின் பிரசுரிப்பின் பின்னர் நடுவர்தீர்ப்பிற்காக இன்னும் காணப்பட்டதுடன் ஒப்பந்ததாரரிற்கான உரிமைத்துவம் செயற்திட்டத்தின் குறைபாட்டு நிபர்த்தி அறிவிப்பு முடிவடைந்ததிலிருந்து 6 மாதங்கள் காலாவதியானதன் பின்னர் கூட இறுதியாக்க முடியாமலிருந்தது. | குறித்த நேர காலத்தின் குறைவு காரணமாக மேலதிக கிரயம் ஏற்படக்கூடிய சாத்தியம். | ஒப்பந்ததாரர் டிஏபீ ஆனது ஒப்பந்ததாரரிற்கு பாதகமான தீர்மானத்தினை வழங்கியதற்காக நடுவர் தீர்ப்பு மற்றும் புலம்பல்களின் ஆரம்பிப்பிற்காக எங்களிற்கு அறிந்திராததுடன் நாங்கள் நடுவர் தீர்ப்பு செயன்முறையை ஆரம்பிக்கும் நிலையிலும் இல்லை. | திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர், ஓர் விசேட நேர வரையறை நடுவர்தீர்ப்பினை ஆரம்பிப்பதற்கான விசேட நிபந்தனைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பிரிவு 38 (அ) அறிவிப்பு 2018 சனவரி 15 இல் பிரசுரிக்கப்பட்டிருந்தும், ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான 05 காணித்துண்டுகளிற்கான இழப்பீடு 2021 சனவரி 13 அளவில் கூட செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மேலதிக வட்டி கிரயங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம். | கூறப்பட்ட துண்டுகளின் காணி உரிமையாளர்களினால் மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக 5 துண்டுகளிற்கு இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, இவ்விடயம் இழப்பீட்டு மதிப்பீட்டு குழுவிற்கு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆர்டிஏவின் காணி பிரிவினால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 31 காணி அனுமதிச்சீட்டுக்களுடன் தொடர்புபட்ட ஐ.அ.டொலர் 1,415,215 தொகையான மீள்ஏற்றுமதி செய்யக்கூடிய உருப்படிகள் 2018 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுக நகர அபிவிரத்தி செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், அச்செயற்திட்ட பணிப்பாளரிடமிருந்தான கோரிக்கை அல்லது சொத்துக்களின் பெறுகைக்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு இம் மாற்றத்துடன் தொடர்புடைய உறுதிப்படுத்தலை பெற்றுத்தர ஒப்பந்ததாரருக்கு ஓர் ஞாபகமூட்டல் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. | அச்சொத்துக்களை பெற்றுக்கொண்டதனை கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டத்திடமிருந்து உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டுமொத்தம் ரூபா 1.9 மில்லியன் மாறல் கட்டளையின் கீழ் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை இடமாறலில் உள்ள உயரமான வாயில்களிற்கான இரண்டு மேலதிக எடையுள்ள பாலங்களின் நிர்மானத்திற்காக ஏற்பட்டிருந்தது. அது நிர்மானிக்கப்பட்டதிலிருந்து 10.5 மாதங்கள் கடந்திருந்தும் 2021 சனவரி 06 இலான கணக்காய்வு திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அரிவடைவதற்கான சாத்தியம். | அவ் எடையுள்ள பாலங்கள் அதிவேகப்பாதையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் தேவை ஏற்படும் போது பயன்படுத்துவர். | அனைத்து நிர்மானங்களினையும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | தொழிநுட்ப விபரணக்குறிப்பின் உபபிரிவு 101.10 இன் பிரகாரம் நிலஅளவை உபகரணங்கள் மற்றும் பயன்படுத்தக்கூடிய உருப்படிகள் என்பன செயற்திட்ட முடிவில் வேலை வழங்குனரிற்கு மாற்றப்பட வேண்டியதுடன் ரூபா 7.4 மில்லியன் ஏற்பாட்டு கூட்டு மொத்த கொடுப்பனவு உருப்படியாக பொறியியலாளர்களிற்கு நிலஅளவை உபகரணங்களின் வழங்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது அவ் உருப்படிகளின் பெறுமதியுடனான பதிவேடுகளை பராமரிக்கவோ ஆவணங்களை பேணியிருக்கவோ இல்லை. | செயற்திட்ட முடிவில் சொத்துக்களினை கையளிப்பதன் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ள முடியாமலிருக்கும். | ஆலோசகரினல் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் ஒப்பந்ததாரரினால் வழங்கப்பட்ட சொத்துக்களின் விபரமான ஆவணங்களினை பேணியிருந்தார். இம்மொத்த சொத்தக்களும் செயற்திட்ட பூர்த்தியாக்கலின் போது ஆர்டிஏவிற்கு முழுமையாக கையளிக்கப்பட்டிருந்தது. | அனைத்து சொத்துக்களிற்கும் முறையான ஆவணங்கள் பேணப்படல் வேண்டும். |
| (எ) | கூட்டு மொத்தம் ரூபா 3,000 மில்லியன் பஸ் மற்றும் புகையிரத போக்குவரத்து முனையத்தின் நிர்மானத்திற்கான பட்டியல் இல 900 இன் 27 உருப்படிகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டிருந்தும், முனைகளை நிர்மானிக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இம் மும்மொழிவு ரத்துசெய்யப்பட்டு செயற்திட்டத்தின் ஏனைய வேலைகளிற்கான அவ்வாறான சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கான கருத்துக்களுடனான மாற்றியமைக்கப்பட்ட பீஓகியுவ் வில் உள்ளடக்கப்பட்டது. | பயன்படுத்தப்படாத கடன் தொகைகள் மீது ஒப்படைப்பு கட்டணங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம். | நகர அபிவிருத்தி அதிகார சபையானது இப்புகையிரத மற்றும் பஸ் முனைகளை நிர்மானிப்பதற்கான அனுமதியினை வழங்காததன் காரணமாக, அது அமுல்படுத்தப்பட்டிராததுடன் பணம் வேறு எந்த நோக்கத்திற்காகவும் செலவிடப்படாமல் செயற்திட்ட முடிவில் சேமிக்கப்பட்டிருந்தது. | அளவைப்பட்டியல்கள் முறையாக மதிப்பிடப்படல் வேண்டும். |